செ.வெ.எண்: 344 நாள்:30.05.2018

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு கிராமப்புறங்களில் உள்ள படித்த இளைஞர்கள் திறன் பயிற்சி பெற வேண்டியதன் அவசியம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்படும் திறன் பயிற்சிகள், சந்தையில் நிலவும் வேலைவாய்ப்பு விவரங்கள் மற்றும் திறன் பயிற்சிக்கு பதிவு செய்வது குறித்த விழிப்புணர்வை தமிழகத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்பட வேண்டுமென ஆணையிட்டுள்ளது. இதன்படி தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் திறன் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திறன் மேளா நடத்தப்பட உள்ளது.

எனவே திருநெல்வேலி மாவட்டத்தில் 19 ஊராட்சி ஒன்றியங்களிலும் திறன் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திறன் மேளா நடத்தப்பட உள்ளது. முதல்கட்டமாக பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வரும் 31.5.18. அன்று திறன் மேளா நடைபெற உள்ளது.

இத்திறன் மேளாவில் வேலைநாடும் இளைஞர்கள் கலந்து கொண்டு திறன் பயிற்சிக்கு பதிவு செய்து பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் **திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ் இ.ஆ.ப.,அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.**

**வெளியீடு :செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி**